# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE MUTHUR DIVISIONAL SECRETARIAT DIVISION

By

MR. SOMASUNDARAM THURAIRAJESPARAN

Index No : COM 85

A dissertation submitted to the Faculty of Commerce and Management, Eastern University, Sri Lanka, as a partial fulfilment of the requirements of the Bachelor of Commerce degree (B.Com).

**DEPARTMENT OF COMMERCE**

**FACULTY OF COMMERCE AND MANAGEMENT**

**EASTERN UNIVERSITY , SRI LANKA**

**1996.**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | | ஆய்வறிக்கையின் சுருக்கம் | 1-3 |
| அத்தியாயம் | - 01 | அறிமுகம் | 4-7 |
| அத்தியாயம் | - 02 | நூலாய்வு | 8-28 |
| அத்தியாயம் | - 03 | பிரதேச செயலக பிரிவு பற்றிய அறிமுகம் | 29-36 |
| அத்தியாயம் | - 04 | கல்வி | 37-50 |
| அத்தியாயம் | - 05 | விவசாயம் | 51-73 |
| அத்தியாயம் | - 06 | மீன்பிடி | 74-88 |
| அத்தியாயம் | - 07 | சுயதொழில் | 89-95 |
| அத்தியாயம் | - 08 | வீடமைப்பு | 96-109 |
| அத்தியாயம் | - 09 | கூட்டுறவு | 110-124 |
| அத்தியாயம் | - 10 | புனர்வாழ்வு | 125-137 |
| அத்தியாயம் | - 11 | புனரமைப்பு | 138-149 |
| அத்தியாயம் | - 12 | சுகாதாரம் | 150-164 |
| அத்தியாயம் | - 13 | சிறுகைத்தொழில் | 165-172 |
| அத்தியாளம் | - 14 | செயற்திட்ட வடிவமைப்பு | 173-183. |

பின்னிணைப்பு : அட்டவணைகள், வரைபடங்கள்

உசாத்துணை நூல்களும், அடிக்குறிப்பும்

## ஆய்வறிக்கையின் சுருக்கம்

ஒரு நோக்கத்தை அடைவதற்கான திட்டத்தை செயற்படுத்தும் போது அதற்கான சாதகமான சூழ்நிலைகள் காணப்படுவதுடன் பாதகமான சூழ்நிலைகளும் வரத்தான் செய்கின்றது. இவ்வாறு மூதூர் பிரதேச செயலாளர் பிரிவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை அமுல்படுத்தும்போது இவ் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் முக்கிய துறைகளான கல்வி, விவசாயம், மீன்பிடி, சுயவேலை வாய்ப்பு, வீடமைப்பு, கூட்டுறவுத்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு, சுகாதாரம், சிறுகைத்தொழில் என்பவற்றின் அபிவிருத்திக்கு சாதக, பாதக நிலைகளை குறிப்பிட வேண்டும்.

கல்வியை பொறுத்தவரை பின்தங்கிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளடங்குவதால் கல்வி நிலையை உயர்த்துவதே பிரதான நோக்கமாகும். இங்கு காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை பலமாக இருந்தாலும் மாணவர்கள் பரீட்சைகளில் அசட்டுத் தன்மையும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறையும் கல்வியின் மேலதிக வசதிகளும் குறைவாக காணப்படுவது பலவீனமாகக் காணப்படுகின்றது.

விவசாயத்துறையை பொறுத்தவரை பிரதான நோக்கமாக உள்ளூர் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியளவு உற்பத்தியை அதிகரிப்பதாகும். இதற்கு பலமாக பயிர்ச் செய்கை காணிகள் அதிகமாகக் காணப்படுவதும், விவசாய தொழிலில் கூடுதலாக ஈடுபடும் குடும்பங்கள் காணப்படுவதாகும். இதற்கு பாதகமாக ஒழுங்குபடுத்தப்பட்ட நீர்ப்பாசன வசதி இன்மை, மரபு ரீதியான முறைகளைப் பயன்படுத்துவதுமாகும்.

மீன்பிடியை பொறுத்தவரையில் உள்ளூர் தேவையை நிறைவு செய்வதுடன், வெளிமாவட்டத்திற்கு மேலதிக உற்பத்தியை ஏற்றுமதி செய்யும் பொருட்டு உற்பத்தியை அதிகரித்தலே இதன் பிரதான நோக்கமாகும். அதிக கடல் பரப்பை கொண்டுள்ளதுடன், மீனவக் குடும்பங்கள் அதிகமாக காணப்படுவதும் நோக்கத்திற்கு சாதகமாக அமைவதுடன், நிதி பற்றாக்குறை, மரபு ரீதியான மீன்பிடி முறைகளை கையாளுதலும் பலவீனமாக உள்ளது.

சுயதொழிலை அபிவிருத்தி செய்வதன் மூலம் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதே பிரதான நோக்கமாகும். இச் சுயதொழிலை மேற்கொள்ள படித்து முடித்த இளைஞர், யுவதிகள் அதிகமாக வேலையற்றிருப்பது பலமாக இருந்தாலும், இச் சுயதொழில் முயற்சியில் அவர்களின் நாட்டம் குறைவாக காணப்படுவதுடன், அவர்களை ஊக்குவிப்பதற்கென பொறுப்பு வாய்ந்த ஒரு நிறுவனம் இன்மையும் பலவீனமாக உள்ளது.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவு மக்கள் அனைவருக்கும் நிரந்தர வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே வீடமைப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். வெற்றுக்கான ஊழியர்கள், நிலங்கள் காணப்படுவது பலமாக இருந்தாலும், வீடமைப்புத் திட்டத்திற்கு உதவி செய்யும் நிறுவனங்கள் வெளி பிரதேசத்தில் இருப்பதும், பயப்பரிவு மக்கள் குறைவாக காணப்படுவதால் நிறுவனங்களிடம் சென்று உதவி கோரல் தயக்க நிலையும் பலவீனமாக காணப்படுகிறது.

கூட்டுறவுத் துறையை பொறுத்தவரையில் கூட்டுறவு துறை விரிவுபடுத்தலும், மக்களை இணைப்பதுமே இதன் பிரதான நோக்கமாகும். இப்பிரதேசத்தில் 30 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளும் 14 கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் செயற்படுவது முக்கிய பலமாகும். ஆனால் நிர்வாக ஊழல்கள் வேறு கூட்டுறவு சங்கங்கள் இல்லாமை என்பன பலவீனமாகக் காணப்படுகிறது.

மூதூர் பிரதேச பிரிவு மக்களில் அதிகமானோர் வன்செயலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்க்கை நிலையை சுமுக நிலைக்கு கொண்டுவருதலே புனர்வாழ்வுத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதற்குப் பலமாக பிரதேச செயலாளர் பிரிவின் துரித வேலைத்திட்டங்களை குறிப்பிட்டாலும், அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் சிறந்த நிர்வாக செயற்பாடுகள் இன்மை பலவீனமாகக் காணப்படுகிறது.

புனரமைப்பை பொறுத்தவரையில் வன்செயல் அழிவுற்ற தனியார், பொதுச் சொத்துக்களை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருதலே பிரதான நோக்கமாகும். உதவி வழங்கும் உள்ளூர், வெளிநாட்டு நிறுவனங்களின் கிளைகள் மூதூரில் அமைந்துள்ளது. பலமாக அமைவதுடன் குறித்த நபர்களுக்கு இவ் உதவிகள் போய்ச் சேராத நிர்வாக ஊழல் காணப்படுவது ஒரு பலவீனமாக காணப்படுகிறது.

சுகாதாரத்தினைப் பொறுத்த வரையில் பிரதான நோக்கமாக இப்பகுதி மக்கள் வெளி பிரதேசங்களுக்குச் சென்று வைத்திய வசதிகளை பெறுவதைத் தவிர்க்கும் முகமாக இப்பிரதேசத்தில் வைத்திய வசதியை அபிவிருத்தி செய்தலும், மக்களிடையே சுகாதார பழக்கவழக்கத்தை உட்புகுத்தலுமாகும். மக்களின் வைத்தியசாலை செல்லும் நாட்டம் குறைவாகவும், வைத்திய ஆலோசகர் பற்றாக்குறையாகவும் இருப்பது பலவீனமாக உள்ளது.

சிறுகைத்தொழிலை பொறுத்தவரையில் இப்பிரதேசத்தில் இருக்கும் வளங்கள் உச்சப்பாட்டிற்கு உட்படுத்தலும், வேலையின்மையைக் குறைத்தலும், மக்களின் வருமானத்தை அதிகரிப்பதுமே இப்பிரதான நோக்கமாகும். அதிகமாக சிறுகைத்தொழிற்கான மூலப்பொருள், ஊழியம் காணப்படுவது பலமாக இருந்தாலும், மூலதன பற்றாக்குறை, நவீன உற்பத்தி முறையை பின்பற்றாமை, தகுந்த சந்தைவாய்ப்பு, போக்குவரத்து வசதி குறைவு என்பன பலவீனமாக உள்ளது.